International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 2 April - June 2026

Published on 14, April - June 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# அக இலக்கியங்களில் திருமண முறைகள்

**அ. லூர்து அருள்சாமி**
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்)

**முனைவர் மா. இராஜவேல்**
உதவிப் பேராசிரியர், அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி
விழுப்புரம் - 605 602.

## முன்னுரை

திருமணம் என்பது மனித சமுதாயத்தின் மதம், இனம், பண்பாடு, மனப் பாங்கு ஆகியவற்றிற்குகேற்ப மாறுபடும் இயல்பை உடையது. சமுதாயத்தின் மனப் போக்கின் அடிப்படையில் உருவானது. எனவேதான் உலகநாடுகளிலும் ஒரு நாட்டிற்குள்ளும் இதன் செயற்பாட்டில் பற்பல மாற்றங்கள் தென்படக் காண்கிறோம்.

தமிழ்ச் சமுதாயத்தில் திருமணமுறை அவர்களின் தனித்த பண்பாட்டினை உணர்த்தும் நிலையில் அமைந்திருந்ததனைச் சங்கப்பாடல்கள் சுட்டிச் செல்கின்றன. பின்னர் காலப்போக்கில் அதன் செயற்பாட்டில் பிறப்பண்பாட்டின் செயல்முறைகள் செல்வாக்குப் பெற்றுவிட்ட நிலையினைக் காப்பியங்களின் வழி அறியமுடிகிறது. அந்நிலையில் இங்கு, பண்டைத் தமிழர்களின் திருமண முறையினை இலக்கியச் சான்றுகள் கொண்டு காண முயல்வோம்.

## திருமணம்

திருமணம் என்பது, அன்பின் அடிப்படையில் ஓர் ஆடவனும் ஒரு பெண்ணும் இணைந்து வாழ்வதற்காகச் சமுதாயத்தால் ஏற்படுத்தப்பட்ட செயல்முறை ஆகும்.

ஓர் ஆடவனும் ஒரு பெண்ணும் தங்களுடைய பால் உந்துதலை நிறைவு செய்து கொள்வதற்காக சமுதாயத்தால் ஏற்படுத்தப்பட்ட ஒரு முறையே திருமணம் என்று மானிடவியலாளர் கூறுகின்றனர்.

“மனித இனம் தன் பால் உந்துதலை ஒரு நிறுவன அமைப்பிற்குள் நிறைவு செய்து கொள்ள ஏற்படுத்திய முறையே திருமணமாகும். உயர் பாலூட்டிகளிடமும் பிற கீழின விலங்குகளிடமும் பாலுறவு ஓர் உயிரியல் செயலாக மட்டுமே நிகழ்கிறது. ஆனால் மனிதர்கள் அடிப்படையில் சமுதாய – பண்பாட்டு விலங்காதலால் அவ்வவுயிரியல் செயலைத் ‘திருமணம்’ என்னும் நிறுவனச் செயலாக்கி அவர்கள்தம் உள – உயிரியல் உந்துதல்களை நிறைவு செய்துகொள்கின்றனர்.” இவ்வாறு பாலியல் தேவையை மட்டுமே நிறைவு செய்வதோடு மட்டுமல்லாமல், இன்றைய சூழலில் திருமணம் என்பது ஒரு பண்பாட்டு அடையாளமாகத் திகழ்கிறது. ஒரு தனி மனிதனின் சுய கௌரவத்தோடு

தொடர்புடையதாக உள்ளது. திருமணத்தின் காரணமாக மனிதன் சில மதிப்புகளையும் பல பொறுப்புகளையும் ஏற்க வேண்டி உள்ளது. குடும்பம் என்ற அமைப்பை ஏற்படுவதற்கு காரணமாக அமைவது இத்திருமணமே ஆகும். திருமணம் என்பது சமுதாயத்தில் நிலவும் சமூக நியதிகள் காக்கப்பட வேண்டும் என்பதற்காக மனிதனால் மனித சமுதாயத்தின் நலன் கருதி படைத்துக் கொள்ளப்பட்ட ஒன்றாகவே காட்சி தருகின்றன.

**திருமணம் சொல்லும் பொருளும்**

இன்றைய தமிழ்மக்களால் திருமணம், கல்யாணம் எனச் சுட்டி உரைக்கப் படுகின்றது. திருமணமுறையினைப் பண்டைத் தமிழர் வதுவை, மன்றல், மணம் எனக் குறித்துள்ளனர் என்பதனை பின்வரும் சங்க இலக்கியப் பாடல்வரிகளால் அறியலாம்.

**“நல்லோர் நல்லோர் நாடி**

**வதுவை யயர விரும்புதி நீயே”**

(ஐங்குறுநூறு-614,5)

**“கழியக் காதல ராயினுஞ் சான்றோர்**

**பழியொடு வரூஉம் இன்பம் வெஃகார்**

**வரையி னெவனோ வான்தோய் வெற்ப**

**கணக்கலை யிருக்குங் கறியிவர் சிலம்பின்**

**மணப்பருங் காமம் புணர்ந்தமை யறியார்**

**தொன்றியல் மரபின் மன்ற லயர”**

(அகநானூறு-112 11,16)

**“விளங்கிழைப் பொலிந்த வேளா மெல்லியற்**

**சுணங்கணி வனமுலை யவளொடு நாளை**

**மணம்புகு வைகல் ஆக லொன்றோ”**

(புறநானூறு-341 10,12)

போன்ற பாடல் வரிகள் சான்று பகர்கின்றன.

“மணம் என்ற சொல் இன்றைய நாளில் நறுமணத்தைக் குறிப்பினும் இலக்கிய வழக்கில் அது திருமணத்தையே குறிப்பதைக் காண்கிறோம். திருமணம் என்பது மனிதனுக்கு மனிதனால் நடத்தி வைக்கப்படும் ஒரு வகை சடங்கு என்பர்”. (ஆய்வுக்கோவை- சங்க தமிழ்த் திருமணமுறை, எஸ். சதக்கத்துல்லா தொகுதி-3 பக்.87)

திருமணம் என்னும் சடங்கைப் பற்றித் தொல்காப்பியர் தமது இலக்கண நூலில் குறிப்பிட்டுள்ளார். தமிழர்கள் பண்டைய நாளில் திருமணம் செய்துகொள்ளாமலே இல்வாழ்க்கையில் ஈடுபட்டனர் என்பதும், பின்னர் இச்செயல்பாட்டில் பொய்மையும் வழுவும் மிகுதிப்படவே அதனைக் களைதற் பொருட்டு முன்னோர் சில விதிமுறைகளை ஏற்படுத்தியதாக தொல்காப்பியர் பின்வரும் நூற்பாவில் குறிப்பிடுகிறார்.

**“பொய்யும் வழுவுத் தோன்றிய பின்னர்**

**ஐயர் யாத்தினர் கரணம் என்ப”**

(தொல்காப்பியம், பொருள்-143)

வடநாட்டவரின் எண்வகை மணமரபுகளைத் தமிழரின் மணமுறைகளாகத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

**“இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு**

**அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்**

**மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்**

**துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே”** (தொல்காப்பியம், பொருள்-89)

ஆனால் அவர் காட்டும் நிலை பழந்தமிழ்ச் சமுதாயத்தில் நிலவவில்லை என்பதனைச் சங்கப் பாடல்கள் தெரிவிக்கின்றன. தமிழருக் கென்று தனி ஒரு திருமண முறை இருந்ததனை சங்கப்பாடல்களால் அறிய முடிகின்றது.

திருமணங்களை சங்க காலத்தில் நம் முன்னோர் தங்கள் வீடுகளிலேயே தெய்வ சாட்சியாக நடத்தி வந்தனர். களவில் ஈடுபட்ட தலைவனும் தலைவியும் களவினை முறையாக தம் பெற்றோருக்குத் தெரிவித்து களவு மணத்தைக் கற்பு மணமாக அமைத்துக் கொள்ளும் நிலையை நம் சங்க இலக்கியங்கள் எடுத்து இயம்புகின்றன.

இங்ஙனம் நடைபெறும் திருமண நிகழ்வு குறித்து அகநானூற்றுப் பாடலினால் அறியலாம்.

**“வாலிழை மகளிர் நால்வர் கூடிக்**

**கற்பினின் வழாஅ நற்பல உதவிப்**

**பெற்றோற் பெட்கும் பிணையை யாகென**

**நீரொடு சொரிந்த ஈரிதழ் அலரி**

**பல்லிருங் கதுப்பின் நெல்லொடு தயங்க**

**வதுவை நன்மணம்"** (அகநானூறு-86)

ஒளி வீசுகின்ற அணிகலன்களை அணிந்த மகளிர் நான்குபேர் ஒன்று கூடினார்கள். 'கற்பிலிருந்து வழுவாதே! நன்மை தரும் முறையில் பல வகைகளிலும் கணவனுக்கு உதவியாக நிற்பாயாக! உன்னை மனைவியாகப் பெற்ற மணவாளனைப் பேணுகின்ற துணைவியாகத் திகழ்வாயாக!' என்று அவளை வாழ்த்தினார்கள். நீருடன் குளிர்ந்த மலர்களையும் நெல்லையும் கலந்து அவளது தலைமீது தூவினார்கள். இவ்வாறு திருமணம் நன்றாக நடந்து முடிந்தது என்று இப்பாடல் கூறுகின்றது. பத்துப்பாட்டு நூல்களில் ஒன்றாகிய குறிஞ்சிப் பாட்டும் 'அறத்தொடு நிற்றல்' என்ற துறையினை வலியுறுத்தி இயற்றப் பெற்றுள்ளமையை அறியலாம்.

## திருவள்ளுவர் கூறும் குடும்பம்

ஒரு ஆணும் பெண்ணும் திருமணம் செய்து கொண்டு வாழ்க்கை நடத்தும் முறையினை வள்ளுவர் இல்லறம் எனக் குறிப்பிடுகின்றார். அத்தகைய இல்லற வாழ்க்கை அமைவதற்கு அடிப்படையாக அமைவது அன்பு. இதனை வள்ளுவர்,

**"அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்**

**நன்புஎனும் நாடாச் சிறப்பு"** (திருக்குறள்-74)

என்று குறிப்பிடுகிறார். மனிதவாழ்வின் அடிப் படைத்தளமாக அன்பு அமைய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறார். அன்புவன் பது ஒருவருக்கு மட்டுமல்லாமல், மற்றவர் களுக்கும் பயன்படக்கூடியதாகும். அதன் நற் பயன் எல்லோரிடத்திலும் நட்பு ஏற்படுத்திச் சிறப்பினையும் உண்டாக்குமாம்.

## மணத்துணையைத் தேர்ந்தெடுக்கும் முறைகள்

மணத்தேர்வுமுறைகள் மக்களின் வாழ்வியல் அடிப்படையிலும் சூழ்நிலை அடிப்படையிலும் பழங்காலம் முதற் கொண்டு பல்வேறு முறைகளில் மக்கள் பின்பற்றி வந்தனர் என்பதை பண்பாட்டு வரலாற்றுச் சான்றுகள் தெளிவுறுத்துகின்றன. மக்களின் பண்பாட்டு மனப்போக்கிற்கு தகுந்தாற்போல காலம் தோறும் மணத்தேர்வு முறைகள் மாறுபட்டு வளர்ச்சி அடைந்ததை சமூக வரலாறுகள் எடுத்துரைக்கின்றன. உலகளவில்; வெவ்வேறு சமூகத்தினரிடையே மணத்தேர்வு முறைகள் பலவகைகளில் இருந்துள்ளன. அவற்றுள் சிலவற்றைப் பற்றி பக்தவச்சல பாரதி அவர்கள் தம்முடைய பண்பாட்டு மானுடவியல் என்ற நூலில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

### 1. தகுதிகாண் திருமணம்

ஒருவன் தான் விரும்பும் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள வேண்டுமாயின், அவள் வீட்டில் பல மாதங்கள் தங்கி அனைத்து வகையான சமுதாயப் பொருளா தாரச் செயற்பாடுகளில் ஈடுபடவேண்டும். அவன் செய்யும் பணிகளில் பெண்ணின் பெற்றோர் நிறைவடைந்தால் பெண்ணை மணம் செய்து கொடுப்பர். இல்லையேல் மறுத்துவிடுவர். அசாமிலுள்ள குக்கிப் பழங் குடியினரிடம் இம்முறைக் காணப்படுகிறது.

### 2. கடத்தல் மணம்

ஒருவன் தான் விரும்பிய பெண்ணை மணப்பதில் தடை ஏற்பட்டால் கடத்திச் சென்று திருமணம் செய்து கொள்வான். இந்தியக் குற்றவியல் சட்டத்தாலும், மாறிவரும் சமுதாய வளர்ச்சியாலும் இம்முறை பெரிதும் குறைந்து வருகிறது.

### 3. தேர்வுத் திருமணம்

பில்லர் பழங்குடிகளில் ஆண்மக்கள் விழாக் காலங்களில் நடக்கும் ஒரு வகைப் போட்டியில் தன் திறனைவெளிப்படுத்தி அவனுக்குப் பிடித்தப் பெண்ணை மணந்து கொள்ளுதல்

### 4. மணப்பெண் பணம் கொடுத்துத் திருமணம் செய்தல்

மணமகன் வீட்டார் மணமகள் வீட்டாருக்குப் பணமோ பொருளோ கொடுப்பதும் அல்லது வேறு வகையான செல்வம் கொடுப்பதும் மணப்பெண் பணம் எனப்படும். பெண்கள் திருமணத்திற்குப் பின் கணவனின் குடும்பத்

தில் உழைக்க வேண்டும் என்பதால் அப் பெண்ணை இழந்த மணமகள் வீட்டாருக்கு ஒரு குறிப்பிட்ட தொகையோ பொருளோ கொடுக்கப்படும். இவ்வகை மணமுறை சங்க காலத்தில் பின்பற்றப்பட்டு வந்ததை குறுந்தொகைப் பாடலால் அறியலாம்.

### 5. பணிசெய் மணம்

திருமணத்திற்கு முன் மணமகன் மணப் பெண் வீட்டிற்குச் சென்று குடும்பப் பணி களைச் செய்ய வேண்டும். அவன் பணிக் காலத்தில் எந்த நேரத்திலும் திருமணம் நடக்கலாம். பெரும்பாலும் இவ்வகைப் பணி மணப்பெண் பணத்தை ஈடுசெய்வதற்காகவே செய்யப்படுகிறது.

### 6. பரிமாற்றத் திருமணம்

மணமகன் தன் மணத்துணையை வேற்றுக் குடும்பத்திலிருந்து பெறும் அதே வேளையில் தன் சகோதரியை அல்லது தன் குடும்பத்துக்கு நெருங்கிய பெண்ணை அக்குடும்பத்திற்கு ஈடாகத் தருவது பரிமாற்றத் திருமண முறை ஆகும். இவ்வழக்கம் தமிழரிடையே ஓரிரு இடங்களில் இன்றளவும் பின்பற்றப்படுகிறது.

### 7. உடன்போக்குத் திருமணம்

மணமக்கள் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து காதலர்களாக வாழ்ந்து இறுதியில் மணம் செய்ய முற்படும்போதும் எதிர்ப்பு ஏற்படும்போதும் மணமக்கள் வெளி இடத்திற்கு ஓடிச்சென்று மணந்து கொள்வர். பின்னர் சிலகாலம் கழித்து அவர்களின் பரவலாக உள்ளது.

### 8. வலிய மணம்

ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் விரும்பிய பிறகு அவன் அவளை மணக்க மறுத்தோ அவளை அடைய தடைகள் ஏற்படுத்தியோ காலந்தாழ்த்தினால் மண மகளே வலிய மணமகன் இல்லத்தில் சென்று குடும்பம் நடத்த முற்படுவாள்.

இவ்வாறான காலத்தில் மணமகன் வீட்டாரால் அடிபட்டும், உணவின்றியும், தங்க இடம் மறுக்கப்பட்டும், வேறு பல கொடுமைகள் பட்டும் வாழநேரிடும். இறுதியில் அவளின் மனஉறுதியைக் கண்டு ஏற்றுக்கொள்ளப் படுவாள். இவ்வகைத் திருமண முறை சில பழங்குடியினரிடையே காணப்படுகிறது.

### முடிவுரை

தமிழர்களின் திருமணம் என்பது தனித்த பண்பாட்டை உணர்த்துகிறது. சுங்க காலம் தொட்டு தற்கால இலக்கியம் வரை இதை அறியலாம் பொதுவாக திருமணத்தின் போது மணமகனை , மணமகளை தேர்ந்தெடுக்கும் முறை தமிழர்களிடம் தன்னததுவம் பெற்று ள்ளது. குறிப்பாக மணமகனை தேர்ந்தெ டுப்பதும் திருமண முறையும் முக்கியத்துவம் பெற்றுள்ளதை தொல்காப்பியம் சங்க இலக்கியம் போன்றவற்றின் மூலமாக தெளி வாகிறது. காலம் காலமாக தமிழிக்கியத்தில் காணப்படும் தமிழரின் திருமண முறையை ஆராயந்து கொண்டிருக்கும் சூழலில் இக்கட்டுரை அதன் உரு முயற்ச்சியாக அமைந்துள்ளது என்பதை தெளியலாம்.

### துணைநின்ற நூல்கள்

1. பக்தவச்சல பாரதி . சீ பண்பாண்டு மானுடவியல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை 600 001, முதற்பதிப்பு 1991
2. கா.காந்தி, தமிழரின் பழக்க வழக்கங் களும் நம்பிக்கைகளும், அறிவுப் பதிப்பகம் சென்னை, 1990
3. தட்சணாமூர்த்தி.அ., ஐங்குநுறுறு (மூலமும் உரையும்) NCPH, அம்பத்தூர் சென்னை. 2004
4. ஜெபால். இரா., உரையாசிரியா, அகநானூறு (மூலமும் உரையும்)
5. வி. நாகராசன், குறுந்தொகை (மூலமும் உரையும்), NCPH, அம்பத்தூர் சென்னை. 2004.
6. இளம்பூரணார் உரை தொல்காப்பியம் பொருளதிகாரம், சுரதா பதிப்பகம் 14